வ.உ.சி. மாவட்டத்தில் புதிய மத்திய வங்கியொன்றை உருவாக்குவது என்பது இயலாத ஒன்று என்பது இந்திய தலைமை வங்கியின் கருத்து. இப்போது புனர் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற மத்திய வங்கி, நிதிநிலைமையில் சீரடைந்த பின்னரே, தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட வ.உ.சி. மாவட்டத்தில் புதிய மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம்

* *3078*—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பழைய கூடலூர் கிராமத்தில் இயங்கி வரும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள அரசு நெல் கொள்முதல் நிலையம், மயிலாடுதுறை வட்டத்தில் அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்படுகிற இடமாகும். அங்கு அரசு நேரடிக் கொள்முதல் நிலையக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்போது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொந்தக் கட்டிடம் கட்ட பரிந்துரை இல்லையென்றாலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைச் சேர்த்து அவசியமான அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 35 நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் 15 நேரடி

1990 ஏப்ரல் 24]

கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள நேரடிக் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசாமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உற்பத்தியாகக் கூடிய நெல் அனைத்தையும் அரசே நேரடியாகக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகக் கொள்முதல் செய்கிறது. கிராமங்களில் கொள்முதல் செய்த நெல்லை வைப்பதற்குக் கட்டிடங்கள் கிடைப்பதற்குக் கஷ்டமாக இருப்பதால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லா கொள்முதல் நிலையங்களுக்கும், அரசின் மூலமாகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப் படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக அரசாங்கம் நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர் விடுதி

* 6746—டாக்டர் பெ. துரைபாண்டியன் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், மானாமதுரை தாலுகா, திருப்பாச்சேத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிட மாணவர் விடுதி தொடங்கப்படுமா ?

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் தற்போது இல்லை.

டாக்டர் பெ. துரைபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருப்பாச்சேத்தி கிராமத்திலிருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளி 1,310 மாணவ, மாணவிகளைப் படிக்க வைக்கக் கூடிய பள்ளியாகும். நான் அமைச்சர் அவர்களிடம் பேசும்போது கடந்த ஆண்டு இந்த ப்ரப்போஸல் வந்த பிறகு